**செ. கு. எண்:275** **நாள் :12.10.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 12.10.2013

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் வட்டம், மணமேடு கிராமம், திருச்சிராப்பள்ளி – நாமக்கல் நெடுஞ்சாலை அருகே 14.9.2013 அன்று சாலையை கடக்கும் போது மணமேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. ஞானஒளி என்பவரின் மகன் சிறுவன் ஜீவா;

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், அச்சரப்பாக்கம் கிராமம், மலைக்காலனி ஜி.எஸ்.டி. சாலை அருகே 14.9.2013 அன்று சாலையைக் கடக்கும் போது திரு. தேனன் என்பவரின் மகன் முருகேசன்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தேவதானம் கிராமம், சிந்தாமணி காவேரி ஆற்றுப் பாலம் அருகே 14.9.2013 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த ஸ்ரீரங்கம் வட்டம், எட்டரை கிராமத்தைச் சேர்ந்த திரு. பொன்னன் என்பவரின் மகன் வீரமலை;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், காளிப்பட்டி கிராமம், துறையூர் - திருச்சிராப்பள்ளி பிரதான சாலையில் 15.9.2013 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த முசிறி வட்டம், சந்தனப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னு என்பவரின் மகன் கருப்பண்ணன்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், திருச்சிராப்பள்ளி – மதுரை தேசிய நெடுஞ்சாலை அருகே 17.9.2013 அன்று காரில் பயணம் செய்த புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், முக்குணமலைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ரகுமான், திரு சையத் பாஷா;

காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், மடிப்பாக்கம் கிராமம், மேடவாக்கம் பிரதான சாலையில் 18.9.2013 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த கீழ்கட்டளை பகுதியைச் சேர்ந்த சந்தோஷ்குமார்;

—— ஆகியோர் அரசுப் பேருந்து மோதியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், காரிமங்கலம் கிராமம், தருமபுரி - கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் 14.9.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது காவல் துறை வாகனம் மோதியதில் கொட்டாவூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. நாகராஜ், திருமதி ராஜி ஆகியோர் சம்பவ இடத்திலேயும், திருமதி சின்னபிள்ளை என்பவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், காரிமங்கலம் கிராமம், தருமபுரி - கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் 14.9.2013 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் காவல் துறை அதிரடிப்படை காவலர்கள் திரு. வேணுகோபால், திரு. விஜயன், திரு. லோகநாதன் மற்றும் திரு. முத்தரசு ஆகியோர் காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், காரிமங்கலம் கிராமம், தருமபுரி - கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் 14.9.2013 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**